# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

*******

**மனு எண்.754/2018/பே.1 .**
ஆணை நாள்: **03-09-2018.**

டெய்லர் ராஜேந்திரன் குடும்பம்
மற்றும் பிறர். -- **மனுதாரர்கள்.**

**செயல் அலுவலர்,**
**இளையான்குடி பேரூராட்சி,**
**சிவகங்கை மாவட்டம்.** -- **எதிர் மனுதாரர்.**

ஆணை.

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சியில், சில வீடுகளின் குடிநீர் இணைப்புகளில் குடிநீர் முறையாக வழங்கப்படுவதில்லை என்ற புகார் தெரிவித்து, மின்னஞ்சல் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 13.06.2018ல் பெறப்பட்டு, உரிய அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மனுதாரர்கள் தங்களது மனுவில், தாங்கள் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சி, கீழாயூர் காலனி, 13–வது வார்டில் வசித்து வருவதாகவும், தங்கள் தெருவில் உள்ள நான்கு வீடுகளுக்குப் பேரூராட்சியின் குடிநீர் இணைப்புக் குழாய் பெற்று, முறையாக வரி செலுத்தி வருவதாகவும், கடந்த ஆறு மாத காலமாக குடிநீர் முறையாக வராததால், அவ்வப்போது பேரூராட்சி அலுவலகத்தில் முறையிட்ட பின்னர், வேறு இணைப்பு தங்கள் நான்கு குடும்பத்திற்கும் மாற்றிக் கொடுத்ததாவும், ஆனால் அந்த இணைப்பிலும் தண்ணீர் வரவில்லை எனத் தெரிவித்து தங்கள் பிரச்சினையினை தீர்த்து வைக்கத் தெரிவித்து முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ 21.06.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 21.06.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மனுதாரர்களுக்கு தங்களது முறையீட்டு மனுவினை, 2015-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள் விதிகளில்) விதி 4-ன் கீழ் உரிய படிவத்தில் (படிவம்-1) பூர்த்தி செய்தும், விதி 6-ன் கீழ் ரூ.10/- கட்டண நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் சமர்ப்பிக்குமாறு மின்னஞ்சல் மூலம் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண்.274/அ.2/2018 நாள்.09.07.2018 ன் மூலம், மேற்படி மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட முறையீடு தொடர்பாக இளையான்குடி துப்புரவு ஆய்வாளரால் நேரடி கள ஆய்வு செய்ததில் மேற்படி குழாய்களின் அடைப்புகள் ஏற்பட்டிருந்தது தெரியவந்ததாகவும், அதனைத் தொடர்ந்து முதலில் அடைப்பு இருந்த குழாய்களை முற்றிலுமாக அகற்றப்பட்டு, புதிய குழாய்கள் பதிக்கப்பட்டு தற்போது குடிநீர் சீராக வருவதாக தெரிவித்து, இது குறித்து மனுதாரர்களால் அளிக்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் நகல் மற்றும் மேற்படி முறையீடு குறித்து ஆய்வு செய்த குடிநீர் திட்டப் பணியாளரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் நகல் ஆகியவற்றுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மேற்படி மனுவில் உள்ள கோரிக்கை நிறைவேற்றப்பட்டதால் மேற்படி மனு தொடர்பான தொடர் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்
1.டெய்லர் ராஜேந்திரன் குடும்பத்தார்,
மின்னஞ்சல் மூலம் ("sultan nizar" sultanrnizar87@gmail.com
2.செயல் அலுவலர்,
இளையான்குடி பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
என்.ஜி.ஓ. காலனி, ஜவகர் நகர்,
திருநெல்வேலி.